Published: 17 Nov 2023 at 7 PM | Updated: 17 Nov 2023 at 8 PM

# துப்பாக்கிச்சூடு: `கலெக்டர் முதல் ஐ.ஜி வரை 21 பேருக்கு எதிராக நடவடிக்கைகள் தொடக்கம்!' - தமிழக அரசு



**``நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம் அளித்த அறிக்கையை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதனடிப்படையில் 21 பேருக்கு எதிராக நடவடிக்கைகள் தொடங்க பட்டிருக்கின்றன!" - தமிழக அரசு தலைமை வழக்கறிஞர்**

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக 2018-ம் ஆண்டு நடந்த போராட்டத்தின்போது, பொதுமக்கள்மீது காவல்துறையினர் மே 22-ம் தேதி துப்பாக்கிச்சூடு நடத்தியதில், 13 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக, தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து, வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. ஆணையத்தின் புலன் விசாரணைப் பிரிவு அளித்த அறிக்கை, தமிழக அரசு அளித்த அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், இந்த வழக்கை தேசிய மனித உரிமைகள் ஆணையம் முடித்து வைத்தது.

இதை எதிர்த்து, மனித உரிமைகள் ஆர்வலர் ஹென்றி டிபேன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையிலான ஆணையம் அளித்த அறிக்கையின் அடிப்படையில் எடுத்த நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்க தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், வழக்கு நீதிபதிகள் நிஷா பானு, மாலா ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. தமிழக அரசுத் தரப்பில் தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம் ஆஜராகி, அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்தார். பின்னர், ``நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம் அளித்த அறிக்கையை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதனடிப்படையில் மாவட்ட ஆட்சியராக இருந்த வெங்கடேஷ், தென் மண்டல ஐ.ஜி-யாக இருந்த ஷைலேஷ் குமார் யாதவ், மாவட்ட எஸ்.பி-யாக இருந்த மகேந்திரன், துணை வட்டாட்சியராக இருந்த சேகர் உள்ளிட்ட 21 பேருக்கு எதிராக நடவடிக்கைகள் தொடங்கியிருக்கின்றன" என்றார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், ``துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ பதிவுசெய்திருக்கும் வழக்கின் நிலை என்ன... ஒரு காவல்துறை அதிகாரிமீது மட்டும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது, மற்ற காவல்துறையினருக்கு எதிரான வழக்கு கைவிடப்பட்டதா?" எனக் கேள்வி எழுப்பினர்.

அதையடுத்து, ``இது தொடர்பாக விளக்கமளிக்க, சி.பி.ஐ தரப்பு வழக்கறிஞரையும், தமிழக அரசின் தலைமைக் குற்றவியல் வழக்கறிஞரையும் அடுத்த விசாரணையின்போது, ஆஜராகச் சொல்கிறேன்" என தலைமை வழக்கறிஞர் குறிப்பிட்டார்.

``குற்றச்சாட்டுக்குள்ளான அதிகாரிகள் இன்னும் பணியில் நீடிக்கிறார்களா அல்லது ஓய்வுபெற்றுவிட்டார்களா என்பதும் தெரியவில்லை. அரசுத் தரப்பு தாக்கல் செய்த அறிக்கையில் இடம்பெற்றிருந்த காவல்துறை அதிகாரி சைலேஷ்குமார் யாதவ், ஏற்கெனவே உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கறிஞர்களிடையே பிரச்னை ஏற்பட்டபோது, அதைத் திறமையாகக் கையாண்டு, நீதிமன்றம் சுமுகமாகச் செயல்பட உதவியவர். அவர் எப்படி இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளானார்... தற்போது நடவடிக்கைக்கு உள்ளாகியிருக்கும் 21 பேருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் என்னென்ன... துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் அவர்களின் பங்கு என்ன என்பது குறித்து தமிழக அரசு விளக்கமளிக்க வேண்டும்" என்று உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கின் விசாரணையை டிசம்பர் 11-ம் தேதிக்குத் தள்ளிவைத்தனர்.

https://www.vikatan.com/government-and-politics/judiciary/actions-initiated-against-21-officers-based-aruna-jegadeesan-commission-report-says-tn-govt